Written by Administrator
Tuesday, 16 April 2013 06:50 - Last Updated Tuesday, 23 April 2013 11:15

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□: 44□□□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□□: 5□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□ □□□□□□ **2013**



உள்ளாட்சியில் பெண்களின் நல்லாட்சி

– முனைவர். சி.தண்டபாணி, முனைவர். க.சீனிவாசன்

நல்லாட்சி

நல்லாட்சி என்பது வறுமை, அறியாமை, நோய், வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை நீக்கி நீதி நிலைநாட்டலும், அதிகாரமளித்தலும், வேலைவாய்ப்பை பெருக்குவதும், மக்களுக்கு தேவையான பணிகளை செய்து கொடுப்பதும் நல்லாட்சி என்று ஆகஸ்ட் 14, 1947ல் சுதந்திர உரையில் ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்த நாட்டுப் பெண்களின் நிலையைக் கொண்டே சொல்லலாம் என்றால் ஜவஹர்லால் நேரு. பெண்கள் முன்னேற்றம் அடைந்த நாடு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடையும். குறிப்பாக இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பின் அனைத்துத் திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்தை மையப்படுத்தியே அமைந்துள்ளன. குறிப்பாகப் பெண்களுக்கு ஆட்சியில் அதிகாரமளித்தல் இதன் முக்கிய அம்சமாகும். பெண்கள் தற்போது புது அதிக அளவில் அரசியலில் ஈடுபடுவதும், அரசு அதிகாரத்தைப் பெறுவதும் குறிப்பிடத் தக்கது. மிகப்பெரிய போராட்டத்திற்குப்பின் மார்ச் 9, 2010ல் இந்திய பாராளுமன்றத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டது.

முனைவர். சி.தண்டபாணி, இணைப்பேராசிரியர், & முனைவர். க.சீனிவாசன், ஆய்வியல் நிறைஞர், பொருளியல் துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் 632 115.

ஒரு நாட்டில் நல்லாட்சியை அரசு அளிக்கும் பொழுது மக்கள் முழு உற்பத்தித் திறனுடன் உழைத்து அந்நாட்டைப் பொருளாதார வளர்ச்சியடைய செய்வார்கள். நல்லாட்சி நடைபெறாத நாட்டில் வளர்ச்சி பின்தங்கியே காணப்படும். குறிப்பாகப் பெண்கள் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துக்கொள்ளும்பொழுது சிறப்பான முன்னேற்றம் அடையும். கிராமப் பஞ்சாயத்துக்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளித்ததின் மூலம் அவர்களின் செயல்பாடுகள், தடைகள், எதிர் நோக்கும் சவால்கள் மற்றும் அவர்களின் பங்களிப்பை மேம்படுத்துவது குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உலக அளவில் பெண்களுக்கு ஆட்சியில் அதிகாரமளித்தல்

உலக அளவில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது இந்தியாவில்தான் அதிகம். சுமார் 2,60,000 பஞ்சாயத்துப் பிரதிநிதிகளில் 75,000 பேர் பெண்கள். ஆனால் உலக அளவிலும்; சரி, இந்திய அளவிலும் சரி பெண் பாராளுமன்ற பிரதிநிதிகள் குறைவாகவே உள்ளனர். உதாரணமாக 2010இல் உலக நாடுகளின் மொத்த ஆண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 36,300. ஆனால், பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 8437 மட்டுமே. அதாவது 18 சதவிகிதம் மட்டுமே. அமெரிக்காவில் பெண் உறுப்பினர்கள் 22 சதவிகிதமும், ஐரோப்பிய நாடுகளில் 19 சதவிகிதமும், ஆசியாவில் 18.5 சதவிகிதமும், பசிபிக் நாடுகளில் 15.3 சதவிகிதமும் அரபு நாடுகளில் 9 சதவிகிதமும் மட்டுமே உள்ளனர்.

இந்தியாவில் பெண்மணி ஒருவர் ஜனாதிபதியாகவும், ஒருவர் சபாநாயகராகவும் இருந்த போதிலும், பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் சொற்ப அளவிலேயே உள்ளனர். மூன்று மாநிலங்களில் மட்டுமே பெண்கள் முதலமைச்சர்களாக உள்ளனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனநாயகம், ஆண்பெண் சம உரிமை, சமூகநீதி மற்றும் பாகுபாடின்மை ஆகியன முக்கிய அம்சங்களாகக் கூறப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைக்கான சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் சட்டத்தில் நிலைநாட்டப்பட்டுள்ளன. எல்லோருக்கும் சம உரிமை என்பதே இந்திய அரசியலமைப்புச் சட்டதின் முக்கிய குறிக்கோள்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பெண்கள்

சட்டப்பிரிவு (Article) 14 சட்டத்தின் முன் ஆண்பெண் இருவரும் சமம் எனக் கூறுகின்றது. சட்டப்பிரிவு 15 படி அரசாங்கம் குடிமக்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். ஆண் பெண் பாகுபாடு காட்டக்கூடாது எனக் கூறுகின்றது. சட்டப்பிரிவு 15(3) பெண்களுக்குச் சாதகமாக மாநில அரசு பாகுபாடு காட்டலாம் எனவும், அதற்கான சட்டங்களை இயற்றலாம் எனவும் விளக்குகின்றது. சட்டப்பிரிவு 16 படி எந்த ஒரு குடிமகனுக்கும் அரசாங்க வேலையில் ஆண்பெண் பாகுபாடு காட்டக் கூடாது என வலியுறுத்துகின்றது. பெண்கள் தாங்கள் விரும்பும் வேலையைச் செய்யவும் இந்த ஷரத்து வழிவகை செய்கின்றது.

1951இல் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியதிலிருந்து இன்று பன்னிரண்டாவது திட்டகால தொடக்கம் வரை 60 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் கடந்து வந்த பாதைகள், அனுபவங்கள், தடைகள் எண்ணிலடங்காதவை. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் பெண்களின் சமூக நலம் மற்றும் அவர்களின் பயிற்சிவு சதவீதத்தை உயர்த்துதல் ஆகியவற்றை மட்டுமே கூறியது. ஐராம வளர்ச்சிக்காகச் சமூக முன்னேற்ற திட்டத்தை (Community Development Programme) 1952இல் உருவாக்கிய பொழுது ஐராமப் பெண்களுக்கென எந்த ஒரு பெரிய திட்டமும் உருவாக்கப்படவில்லை. மலினமோ திட்டமும் பெண்களுக்கெனச் சிறப்பு திட்டம் எதையும் கொடுக்கவில்லை. அதற்குப்பின் வந்த திட்ட காலங்கள் பெண் கல்வி, ஊட்டச்சத்து, மகப் பேறுகால ஆரோக்கியம் ஆகியவற்றை வலிறுத்தியன. அங்கன்வாடி மற்றும் ஆரம்பக் கல்வியில் பெண்கள் மட்டுமே பணிபுரிய அரசு நியமித்தது.

நல்லாட்சியின் முக்கிய சவால்கள்

1. சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

சட்டம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் மற்றும் அவர்களின் சந்தோசம் ஆகியவற்றை நிலை நிறுத்துவதாக இருக்க வேண்டும். ஜனநாயக நாட்டில் சட்டத்தின் ஆட்சியைக் கொண்டுதான் இவற்றைச் செயல்படுத்த முடியும். மக்களுக்கு சட்டத்தின் மீது முழு நம்பிக்கை வேண்டும். சட்டத்தைப் பாதுகாக்க அரசு முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். சட்டத்திற்கு மீறி யாரும் இல்லை. அரசு நிர்வாகமும் சட்டத்திற்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும்.

இந்திய நாட்டில் சட்டத்தின் முன் அனைவரும

சமம் என்று கூறப்படுகிறது. இந்திய அரியலமைப்புச் சட்டம் பிரிவு 368ன் படி. "சட்டத்தின் ஆட்சி" "ஜனநாயகம்" இவை இரண்டும் இந்திய அரியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பு எனக் கூறப்படுகிறது. நீதி மன்றமே மேன்மையான அதிகாரம் படைத்த அமைப்பு ஆகும். நீதி மதிக்கப்படும் பொழுது அரசு நல்லாட்சியைத் தருகிறது.

2. வேலைவாய்ப்பு (Employment)

இந்தியாவில் உழைக்கும் வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கை 50 சதவிகிதமாக உள்ளது. அவர்களுக்கு நல்ல தரமான கல்வியையும், நிறமையையும் அளித்தால் வேலைவாய்ப்பு பன்மடங்கு பெருகி நாட்டின் பொருளாதாரம் உன்னத நிலையை அடையும். இதில் பெண்களுக்குக் குறிப்பாகக் கிராமப்புறப் பெண்களுக்கு முன்றில் ஒரு பகுதி இட ஒதுக்கீடு அளித்தல் வேண்டும். மத்திய அரசு வறுமை ஒழிப்புத் திட்டங்கள், பாரத் நிர்மாண் திட்டம் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு அளித்துள்ளது.

3. அதிகாரமளித்தல் (Empowerment)

வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிப்படையாக அமைவது அதிகாரமளித்தல். குறிப்பாகப் பெண்களுக்கு அதிகாரமளித்தல் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு அதிலும் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

உள்ளாட்சியில் பெண்களின் நல்லாட்சி

இன்றைய காலக்கட்டத்தில் உலக அளவில் இந்தியா பொருளாதாரத்தில் முன்றாவது பெரிய நாடாகருவெடுத்த போதிலும், பெண்களுக்கான அரசியல் உரிமை என்பதில் இன்னும் பின்தங்கியே உள்ளது. குறிப்பாகக் கிராமப்புறங்களில் பெண் பாகுபாடு அதிகமாகக் காணப்படுகின்றது. சமூகத்தில் அவர்களின் நிலை இன்னும் தாழ்நிதே உள்ளது. ஆண்பெண் பாகுபாடு கருவிலிருந்தே ஆரம்பமாகின்றது. இது கல்வி, வேலைவாய்ப்பு, சொத்து உரிமை, அரசியலில் பங்கெடுத்தல், முடிவெடுத்தலில் பெண்கள் பங்கு என எல்லா நிலைகளிலும் கிராமங்களில் வேறுபாடு காணப்படுகின்றது. பொருளாதாரச் சமையாகவே பெண்கள் கிராமங்களில் இன்றளவும் காணப்படுகின்றனர். இப்பொழுதும் ஆண் பிறப்பையே கிராம மக்கள் விரும்புகின்றனர். பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளும், வரதட்சணைக் கொடுமைகளும் அதிக அளவில் காணப்படுகின்றன.

அரசு இக்குறைபாடுகளை போக்கவும், சம உரிமை வழங்கவும், 1992ஆம் வருடம் கிராம பஞ்சாயத்துகளில் மூன்றில் ஒரு பகுதி பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் 73ஆவது திருத்தம் கொண்டு வந்தது. அதன் காரணமாகவே 75,000 பெண்கள் கிராமப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளாக உள்ளனர். 73ஆவது திருத்தம் கிராமப் பஞ்சாயத்துகளில் பெண்கள் அங்கத்தினர்களாகவும், செயல்பாடு மிக்கவர்களாகவும், சமுதாயத்தில் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் செல்லும் கருவியாக மாறியது. 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் நாள் இந்திய நாடாளுமன்ற மக்களிர் சபைக் கூட்டத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 33 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்த ஒரத்து 243(D) சட்டப் பிரிவினை திருத்த ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்புதல் நடைமுறைப்படுத்தும்பொழுது கிராம் பஞ்சாயத்துகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் தற்பொழுது உள்ள 3.3 மில்லியனிலிருந்து 4.4 மில்லியனாக உயர வாய்ப்புள்ளது. இந்த 50 சதவீத இட ஒதுக்கீட்டை இராஜஸ்தான், கேரளா, மற்றும், குஜராத் போன்ற மாநிலங்கள் 2010ஆம் ஆண்டில் நடைபெற்ற பஞ்சாத்து தேர்தல்களில் நடைமுறைப்படுத்தின. மேற்குவங்க அரசும் 2013ஆம் ஆண்டில் அம்மாநிலத்தில் நடைபெறும் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தலில் நடைமுறைப் படுத்த கொள்கை ரிதியாக ஒப்புக்கொண்டுள்ளது.

கிராமப் பஞ்சாயத்துகளில் பெண்களின் பங்களிப்பு

பல்வேறு தடைகளுக்கிடையே பெண்கள் கிராமப் பஞ்சாயத்துகளில் சிறப்பாகச் செயல் படுவதாகப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மத்திய அரசின் பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் நடத்திய ஆய்வில் மேற்கண்டவாறு பெண்கள் பங்களிப்புக் கூறப்பட்டுள்ளது.

- பெண்கள் கிராம பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் பொழுது நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் அதிக அளவு பெண்கள் பங்கேற்கின்றனர்.
- பெண் பிரதிநிதிகள் அதிக அளவிலும், பெண் தலைவர்கள் இருக்கும் பஞ்சாயத்துகளில்; முக்கிய தேவைகளான குடிநீல் வழங்கல், வீடு, சுகாதாரம் போன்ற திட்டங்களுக்கான செலவு அதிக அளவில் உள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்

தலைவர்களின் நிர்வாகம் சிறந்ததாகவும், ஊழலற்ற மற்றும் வெளிப்படையான நிர்வாகம் காணப்படுகின்றது.

- பெண் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ள பஞ்சாயத்துகளில் சமூக வன்கொடுமை களான குழந்தைத் திருமணம், கள்ளச்சாராய விற்பனை, பெண் சிசுக்கொலை, மகப்பேறு இறப்பு ஆகியவை வெகுவாக குறைந்துள்ளன.

பஞ்சாயத்துகளில் பெண்களின் நல்லாட்சிக்கு உள்ள தடைகளும், அவர்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வழிமுறைகளும்

- பெண்கள் தங்கள் குடும்பப் பொறுப்புகளோடு அரசு நிர்வாகப் பணிகளையும் சேர்த்து கவனிக்க வேண்டியுள்ளது. அதற்குத் தேவையான காலம் போதுமானதாக இல்லை.
- பெரும்பாலான பஞ்சாயத்து பெண் பிரதிநிதிகள் தங்கள் கணவர் கூறுவதை செயல்படுத்துவதாக உள்ளனர். உண்மையான அதிகாரம் கணவரிடம் உள்ளது. எனவே ஆண்கள் தலையீட்டினைக் குறைக்கச் சட்டம் கொண்டுவருவது அவசியமாகும். அதேபோல் பொதுப் பணிகளிலும், கணவன்மார்கள், அவர்கள் சார்பாக ஈடுபடுவது அதிகம் உள்ளது. இதைத் தடுக்கச் சட்டரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பொது விவாதங்களில் பெண்கள் பங்குபெறும் தரம் குறைவாகவே உள்ளது. போதிய பயிற்சிகளின் வாயிலாக அவர்களின் தரத்தை மேம்படுத்தலாம்.
- கிராம பஞ்சாயத்துகளில் பெண் பிரதிநிதிகள் மற்றும் பெண் தலைவர்களில் பெரும்பாலானோர் படிக்காதவரும், அல்லது குறைந்த படிப்பறிவு கொண்டவருமாக உள்ளனர். எனவே அவர்களின் கல்வித்தரம், ஆங்கில அறிவு ஆகியவற்றை மேம்படுத்தப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- கிராமப் பஞ்சாயத்து தலைவர், பிரதிநிதிகளின் அதிகாரம் குறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ளது. எனவே அவர்களின் அதிகாரம், பணிகள், அரசு நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.
- பெண் தலைவர்கள் உள்ள பஞ்சாயத்துகளுக்கு அதிக திட்டங்கள் மற்றும் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து அவர்களின் பங்களிப்பை மேம்படுத்தலாம்.
- நல்லாட்சிக்கு உள்ள முக்கியத் தடை குற்றப் பின்னணி உள்ளவர்கள் அதிக அளவு அரியலில் ஈடுபடுவது. அரசு அதிகாரிகள், அரியல்வாதிகள், வியாபார நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு உள்ள இரகசியக் கூட்டு நாட்டின் நல்லாட்சியைப் பெரிதும் பாதிக்கின்றது. பெரும்பாலான பெண் தலைவர்களின் கணவன் மார்களின் செயல்பாடுகள் நல்லாட்சியைக் கெடுக்கும் விதமாக அமைகிறது. இதனைச் சட்ட ரீதியாகத் தடுக்க வேண்டும்.
- நல்லாட்சியில் தடையாக உள்ள முக்கிய காரணிகளில் ஒன்று லஞ்சம். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் பேராசையே லஞ்சத்திற்குக் காரணமாக அமைந்து அரசின் செயல்பாடுகள் நிறமையற்றதாக ஆக்கிவிடுகிறது. குறிப்பாக இதில் ஏழை எளிய, சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது. நிறமையான மற்றும் வெளிப் படையான அரசு நிர்வாகம் மட்டுமே லஞ்ச சத்தைப் போக்குவதாக அமையும்.

மேற்கூறிய அனைத்துச் சவால்களையும் தோற்கடிக்க முறையில் மாற்றம் கொண்டுவருவது நடைமுறைப்படுத்தினால் மட்டுமே மக்களுக்கு நல்லாட்சியை வழங்க முடியும்.

முடிவுரை

பெண்களுக்கான நலத்திட்டங்கள், சம உரிமைச் சட்டங்கள் பலவற்றை, நடைமுறைப் படுத்திய போதிலும், அவர்களின் மீதானப் பார்வை, அணுகுமுறைகள் பெரிய அளவில் மாறியதாகத் தெரியவில்லை. குறிப்பாக கிராமப் பஞ்சாயத்துகளில் உண்மையான, சுதந்திரமான பெண் அதிகாரமளித்தலுக்குத் தடையாக இருப்பன அறியாமை, எழுத்தறிவின்மை, அனுபவமின்மை, அதிக வீட்டு வேலைகள், பொருளாதார பலமின்மை, சட்டம் மற்றும் அரச விதிகள் பற்றிய விழிப்புணர்வின்மை, அரசு திட்டங்கள், சலுகைகள் பற்றிய தெளிவின்மை ஆகியவைவாகும். இத்தடைகள் முழுமையாக நீக்கப்பட வேண்டும். எந்தத் தலைவீடும் இல்லாமல், பெண்களைச் சுதந்திரமாகச் செயல்பட வைக்க வேண்டும்.

பெண்களுக்கு ஆட்சியில் அதிகாரமளித்தல் என்பது மேலிருந்து கீழ் என்னும் அடிப்படையில் அல்லாமல், கீழிருந்து மேல் என்னும் அணுகுமுறையில் அமைந்திட வேண்டும். அதாவது பெண்களுக்கு அதிகாரமளித்தல் கீழ்மட்டத்தில் கிராம அளவில் இருந்து முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். எல்லா நிலைகளிலும் முடிவெடுத்தலில் (Decision - Making) பெண்கள் சுதந்திரமாகப் பங்கேற்க வேண்டும். ●